## மார்ச் - 01 - வியாழன்

### தூய அல்பின்

### நற்பேறு பெற்றவர் யார்? திபா. 1:1

## முதல் வாசகம் : எரேமியா 17 : 5 - 10

ஆண்டவர் கூறுவது இதுவே: மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர். அவர்கள் பாலைநிலத்துப் புதர்ச்செடிக்கு ஒப்பாவர். பருவ காலத்திலும் அவர்கள் பயனடையார் பாலை நிலத்தின் வறண்ட பகுதிகளிலும் யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர். ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர் ஆண்டவரே அவர்களது நம்பிக்கை. அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர் அது நீரோடையை நோக்கி வேர் விடுகின்றது. வெப்பமிகு நேரத்தில் அதற்கு அச்சமில்லை அதன் இலைகள் பசுமையாய் இருக்கும் வறட்சிமிகு ஆண்டிலும் அதற்குக் கவலை இராது அது எப்போதும் கனி கொடுக்கும். இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது அதனை நலமாக்க முடியாது. அதனை யார்தான் புரிந்துகொள்வர்? ஆண்டவராகிய நானே இதயச் சிந்தனைகளை ஆய்பவர் உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர். ஒவ்வொருவரின் வழிகளுக்கும் செயல்களின் விளைவுக்கும் ஏற்றவாறு நடத்துபவர

**பதில்பாடல்:** ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டோர் பேறுபெற்றோர்

## நற்செய்தி : லூக்கா 16 : 19 – 31

அக்காலத்தில் இயேசு பரிசேயரை நோக்கிக் கூறியதாவது: ”செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலையில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார். அவர், ”தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும் இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச்செய்ய அவரை அனுப்பும். ஏனெனில் இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்” என்று உரக்கக் கூறினார். அதற்கு ஆபிரகாம், ”மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய் அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார் நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது” என்றார். ”அவர், ”அப்படியானால் தந்தையே, அவரை என் தந்தை வீட்டுக்கு அனுப்புமாறு உம்மிடம் வேண்டுகிறேன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்திற்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே” என்றார்.

**தியானம்:** நாங்கள் மனமாற்றம் பெற்று தூய வாழ்வு வாழ எங்களைத் தயார்படுத்தும் இக்காலங்களிலும் இன்றைய தியான வாசகங்களும் தூய்மையானவர்களாக இறை இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழ்வோமேயானால் நாங்கள் ஒவ்வொருவரும் பேறு பெற்றவர்களாவோம். அவர்கள் நீரோரம் நடப்பட்ட மரம் போல் உறுதியுடன் இருப்பார்கள் என்று தெரிவிக்கின்றது. இன்று நாங்கள் மனமாறி பேறுபெற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா? என்று சிநதித்து பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் நாங்கள் இருக்கும் மட்டும் சந்தோஷமாக யாவற்றையும் அனுபவித்து செல்வோம் என்று கூறி இறைவனுக்கு முன்னுரிமை கொடுக்காமல் ஏனோ தானோ என்று வர்ந்துகொண்டிருக்கின்றோம். இவ்வாறு வாழ்ந்தால் எவ்வாறு பேறுபெற்றவர்களாக நீரோரம் நடப்பட்ட மரங்கள்போல் உறுதியுடன் பலனளிக்க முடியும். நற்செய்தி வாசகத்திலும் கூட செல்வந்தரான லாசர் வாழும்பொழுது யாவற்றையும் அனுபவித்து மகிழ்ந்து வாழ்ந்தான். ஆனால் ஏழையோ துன்பத்தை, துயரத்தையே அனுபவித்தான். இருவரும் இறந்தார்கள் லாசரோ நரக வேதனையை அனுபவித்தார். ஏழையோ ஆபிரகாமின் மடியிலே அமந்தார். (லூக்,16:22-23) இறைவன் எங்களைத் தெரிந்தெடுத்திருக்னிறார் என்றால் மற்றவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும், அவர்களை நல்ல அறிவுரைகளை வழங்க வேண்டும் இல்லாவிடின் நாங்கள் வாழ்வது வீணே. ஆனால் நாங்களோ லாசரைப் போன்று செல்வத்திற்கு அடிமைப்பட்டு, பதவி மோகம் கொண்டு வாழ்கிறோம். அவ்வாறு வாழாமல் இறைவன் விரும்பும் அன்பு பாசத்திற்கு முன்னுரிமை கொடுத்து வரும் துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் இறைவன் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக நற்கனி கொடுக்கும் மரங்கள் போன்று உறுதியுடன் வாழ்ந்து இறைவனின் சன்னிதானம் நாங்களும் செல்ல எங்களைத் தயார் படுத்தவோம்.